நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**CC. No. 336/2022**

**D.W.1 –ன் வாக்குமூலம்**

**(எதிரிதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சேகர் |
| தந்தை / கணவர் பெயர் | : | வரதராஜ் |
| கிராமம் | : | பல்லடம் |
| வட்டம் | : | பல்லடம் |
| மாவட்டம் | : | திருப்பூர் |
| சாட்சி வரிசை எண் | : | **DW1** |
| வயது | : | 60 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2026–ஆம் வருடம், மார்ச் மாதம், 13–ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**புகார்தாரர் ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

(விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.46 P.M.

1. என்னிடம் காட்டப்படும் பு.சா.ஆ.1 வழக்கு காசோலையில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் பவானி வாசவி கல்லூரி அஞ்சல் , ஆவின் பாலகம்

எதிரில் சங்கமம் அகர்பத்தி என்ற நிறுவனத்தை வைத்திருந்தேன் என்றால் சரிதான். அந்த நிறுவனத்தை நடத்தி வரும்போது சித்தோடு, இந்திராநகர் எக்ஸ்டண்சனில் நான் குடியிருந்து வந்தேன் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்ப்பாக புகார்தாரர் ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

2. புகார்தாரர் என்னுடைய வீட்டு முகவரிக்கும், நிறுவன முகவரிக்கும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றாலும், அதை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்றாலும் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணையில் வழக்கறிஞர் அறிவிப்பு வரவில்லை என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். என்னிடம் காட்டப்படும் நீதிமன்றத்தில் இருந்து அனுப்பப்பட்ட அழைப்பாணைக்கான அஞ்சல் ஒப்புதல் அட்டையில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **(அந்த அஞ்சல் ஒப்புகை அட்டை பு.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3. மேற்படி பு.சா.ஆ.5 ஆவணத்தில் நான் சொன்ன சித்தோடு இந்திரா நகர் எக்ஸ்டன்சன் முகவரியில் 11.01.2023–ம் தேதியில் நான் இருந்து வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். நான் 2021–ம் ஆண்டே பல்லடத்திற்கு நான் குடிபெயர்ந்து விட்டேன் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல, எனக்கு தபால் வந்திருப்பதாக தகவல் சொன்னதால் வந்து வாங்கினேன். நான் பல்லடத்திற்கு குடிபெயர்ந்த விவரத்தை தபால் அலுவலகத்திற்கு தெரிவிக்கவில்லை. நான் குடியிருந்த இடத்திற்கு அருகில் பஞ்சர் கடை வைத்திருக்கும் நபர் எனக்கு போன் செய்து தகவல் சொன்னதால் நான் தபால் அலுவகத்திற்கு நேரடியாக சென்று மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்டேன்.

4. புகார்தாரரை நான் இந்த வழக்கில் ஆஜராவதற்கு முன்னால் பார்த்தது இல்லை என்று முதல் விசாரணையில் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். புகார்தாரரின் உடன் பிறந்த சகோதரர் ஜெகதீசனை நான் ஊதுபத்தி கம்பெனி வைத்திருக்கும் போதிருந்து 2018 முன்னால் இருந்து எனக்கு தெரியும். மேற்படி இந்திரா நகர் எக்ஸ்டண்சனில் குடியிருப்பு ஜெகதீசன் வீட்டின் அருகில்தான் நானும் குடியிருந்தேன் என்றால் சரிதான். எனது வழக்கறிஞர் புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்வதற்கான புகார்தாரர் சம்மந்தப்பட்ட விவரங்களை

நானும், அவரும் மைலம்பாடி சென்று விசாரித்து தெரிந்து கொண்டோம். ஜெகதீசனின் சகோதரிதான் பாரிஜாதம் என்பதை வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டுதான் தெரிந்து கொண்டேன்.

5. புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்யும் போது புகார்தாரர் வீட்டு வாடகை வசூல் செய்ய பவானி வரும் போது எனக்கு பழக்கம் என்று குறிப்பிட்டு அவரிடம் கேள்வி கேட்கப்பட்டிருந்தால் அந்த சங்கதி தவறு. இந்த வழக்கிற்கு முன்னால் புகார்தாரரை எனக்கு அறிமுகம் கிடையாது. ஊதுபத்தி கம்பெனி 2016-ம் ஆண்டு முதல் 2018-ம் ஆண்டு வரை வைத்திருந்தேன். எனக்கு இரண்டு பெண் குழந்தைகள், இருவருக்கும் திருமணமாகிவிட்டது. எனது ஒரு மருமகன் டெக்ஸ்மோ கம்பெனியில் வேலை செய்து வருகிறார். மற்றொரு மருமகன் சரத்குமார் கடம்பூர் காவல் நிலையத்தில் காவலராக பணிபுரிந்து வருகிறார்.

6. இரண்டு பெண்களுக்கும் எவ்வளவு நகைகள் போட்டோம் என்றால் மூத்த பெண்ணிற்கு மட்டும் 5 பவுன் சீர்வரிசையாக கொடுத்தேன், இரண்டாவது பெண்ணிற்கு சீர்வரிசை எதுவும் நான் கொடுக்கவில்லை. இந்த வழக்கிற்கு முன்பாக அசோக்கிற்கு பணம் கொடுப்பதற்காக மேட்டுருக்கு இரண்டு, மூன்று முறை வந்துள்ளேன். அதன் பிறகு அவர்களே வந்து பணம் வாங்கி கொண்டார்கள். 2018-ம் ஆண்டு நான் கடன் வாங்கியதாக சொல்லும் மேட்டுர் பைனான்ஸின் உரிமையாளர் அசோக்தான்.

7. மேற்படி நான் 2018-ம் ஆண்டு 20,000/- கடன் வாங்கியதற்கு 100-க்கு 2 ரூபாய் என்ற விகிதத்தில் மாதமாதம் வட்டி கணக்கிட்டு கொடுத்து வந்தேன். ரூ.400 பிரதிமாதம் வட்டி கொடுத்துவந்தேன். பிரதி மாதம் வட்டியுடன் சேர்த்து மேற்படி அசலில் ரூ.3000/- ஏழு மாதங்கள் கொடுத்து வந்தேன். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக அசோக்கிற்கு கொடுக்க வேண்டிய பணத்தை நான் கொடுத்து விட்டதாகவும், ஆனால் காசோலையையும், பிராமிசரி நோட்டையும் திரும்ப கொடுக்க மறுக்கிறார் என்று காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை.

8. மூன்று மாதம் நான் நேரடியாக கொடுத்தேன். அதன் பின்னிட்டு அசோக்

நேரடியாக பவானி வந்து என்னிடம் வாங்கி கொண்டார். அசோக் என்பவரை எனக்கு ஜெகதீசன் மூலம் தான் தெரியும். அசோக்ஜெகதீசனின் குடும்ப நண்பர் ஆவார், இருவருக்கும் எவ்வாறு பழக்கம் என்று தெரியாது. எனது பூர்வீகம் பவானிக்கு அருகில் உள்ள குறிச்சி ஆகும். அங்கிருந்த நிலத்தை நான் வழக்குற்கு முன்பாக 2017-ம் ஆண்டே விற்றுவிட்டேன். பவானியில் நான் 10 வருடங்களாக குடியிருந்தேன். அங்கு வீட்டின் அருகிலும், நான் கம்பெனி வைத்திருந்த பகுதிக்கு அருகிலும் உள்ள நபர்களுடன் நான் நன்றாகத்தான் பழகிவந்தேன்.

9. எனது மருமகன்கள் நல்லநிலையில்தான் உள்ளார்கள். நான் சொந்தகாரர்களிடம் கடன் வாங்க கூடாது என்பதற்காகத்தான் மேட்டுர் வந்து ரூ.20,000/- கடன் வாங்கினேன். புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்யும் போது உள்ளூரிலேயே மனிதாபிமானம் உள்ள நபர்கள் இருக்கும் போது புகார்தாரரிடம் இங்கு வந்து கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்று நான் சொல்லவில்லை. புகார்தாரரை தனிப்பட்ட விவரங்கள் குறித்து குறுக்கு விசாரணையில் கேட்டிருக்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

10. இந்த வழக்கில் புகார்தாரர் வழக்கு தாக்கல் செய்யும் போது கனம் நீதிமன்றத்தில் ஒப்படைத்துவிட்டு பின்னர் 28.12.2022-ம் தேதி திரும்ப பெற்று மீண்டும் முதல் விசாரணையின் போது நீதிமன்றத்தில் ஒப்படைத்த விவரம் எனக்கு தெரியாது. அதனால் வழக்கு காசோலையை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார் என்பது பொய் என்றால் எனது வழக்கறிஞருக்குதான் தெரியும். தற்போது என்னிடம் காட்டப்படும் பு.சா.ஆ.1 காசோலை நான் கையெழுத்து போட்டுக்கொடுத்த என்னுடைய காசோலை தான்.

11. அந்தியூர் கிருஷ்ணாபுரத்தை சேர்ந்த பெரியகண்ணா (எ) வெங்கிட்டு என்பவரை எனக்கு தெரியாது. சமயக்காரனூர் காந்தியை அவரிடம் சீட்டு போட்டவகையில் எனக்கு தெரியும். ஜெகதீசன் மனைவி ஈஸ்வரி என்பவரையும் எனக்கு தெரியும், அவர் எனது கம்பெனிக்கு ஊதுபத்தி வாங்கவும், பக்கத்தில் பால் வாங்கவும் வருவார். சீனிவாசா நகரை சேர்ந்த கண்ணன், சபரி ஆகிய இருவரையும் எனக்கு தெரியாது, நான் அவர்களை பார்த்தது இல்லை.

12. புகார்தாரர் உட்பட மேற்சொன்ன அனைத்து நபர்களிடமும் நான் கடன் வாங்கி கொண்டு, அதை திருப்பி கொடுக்காமல் ஊதுபத்தி கம்பெனியையும் காலி செய்துவிட்டு, இரவோடு இரவாக எனது வீட்டையும் காலி செய்துவிட்டு பல்லடம் சென்று குடியேறிவிட்டு பணத்தை திருப்பி கொடுப்பதை தவிர்ப்பதற்காக பொய் வழக்காடி வருகிறேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் அண்ணன் ஜெகதீசனுக்கு தெரியாமல் புகார்தாரரிடம் தனியாக கடனும், ஜெகதீசன் மனைவியிடம் தனியாக கடனும் பெற்றுக்கொண்டு, ஏமாற்றியுள்ளேன் என்றால் சரியல்ல.

13. வங்கியில் இதற்கு முன்பு கடன் வாங்கி திரும்ப 2018–ம் வருட சமயத்தில் செலுத்திவிட்டேன், சரியான தேதி எனக்கு நியாபகம் இல்லை. 01.05.2022–ம் தேதியில் ரூ.2,50,000/– கைமாற்று கடனாக பெற்றுக்கொண்டு மூன்று மாதத்தில் திருப்பி செலுத்துவதாக உறுதி அளித்து, அவ்வாறு திருப்பி செலுத்தாததால் 01.11.2022–ம் தேதியில் புகார்தாரர் மேற்படி கடனை திருப்பி கேட்டபோது புகார்தாரர் பெயருக்கு வழக்கு காசோலையை மேட்டுர் வந்து மேற்படி கடன் தொகைக்காக வழங்கிவிட்டு தற்போது அசோக் என்பவரிடம் காசோலை கொடுத்ததாகவும், புகார்தாரர் யார் என்று தெரியாது எனவும், புகார்தாரரின் தனிபட்ட சங்கதிகளை கேட்டு புகார்தாரருக்கு அவப்பெயர் ஏற்படுத்தியும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 1.30 P.M.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**